**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – சிறப்பு பள்ளி – கடும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சிறப்பு நடுநிலைப் பள்ளி, வில்லாபுரம், மதுரை மாவட்டம் – தரைத் தள பராமரிப்பு மற்றும் மின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் – ரூ.20.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 16** | **நாள்: 14.05.2018**
**விளம்பி – சித்திரை, 31**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 112/சிப.5/2017, நாள் 22.02.2017, 04.07.2017 மற்றும் 29.01.2018.

----------

**<u>ஆணை</u>:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மதுரை மாவட்டம், வில்லாபுரத்தில் செயல்பட்டு வரும் கடும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சிறப்பு நடுநிலைப் பள்ளியினை கடந்த 30.08.2016 அன்று கள ஆய்வு மேற்கொண்ட தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் சிறப்பு உறுப்பினர் திரு. ஜேகப் புன்னோஸ் அவர்கள், பள்ளியின் தரைதளத்தில் உள்ள தரைப் பகுதி மிகுந்த பாதிப்படைந்துள்ளதையும், ஏனைய பிற சேதங்களையும் குறிப்பிட்டு ஆய்வுக் குறிப்புகளை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேற்படி ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், மேற்கண்ட பள்ளிக் கட்டட பராமரிப்பு மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் உள்ள பிற சீரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ள ரூ.17,00,000/– மற்றும் மின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.3,00,000/– என ஆக மொத்தம் ரூ.20,00,000/–க்கான திட்ட மதிப்பீடுகள் தலைமைப் பொறியாளர், (கட்டடம்) பொதுப்பணித் துறை, மதுரை மண்டலம் அவர்களின் ஒப்புகையுடன் பெறப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2. ஆதலால், மதுரை மாவட்டம், வில்லாபுரம், கடும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சிறப்பு நடுநிலைப் பள்ளியில் தரைதள பராமரிப்பு மற்றும் பிற பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, 2016–2017ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீட்டின்படி பள்ளிக் கட்டட பராமரிப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக ரூ.17,00,000/– மற்றும் மின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.3,00,000/– என மொத்தம் ரூ.20,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவுடன் கூடிய திட்ட மதிப்பீடுகளை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மதுரை மாவட்டம், வில்லாபுரத்தில் செயல்பட்டு வரும் கடும் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு சிறப்பு நடுநிலைப் பள்ளியில் கட்டட பராமரிப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக ரூ.17,00,000/– மற்றும் மின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.3,00,000/– ஆக மொத்தம் ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

[த.பி.பா.]

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2059 பொதுப் பணிகள் – 01 அலுவலகக் கட்டடங்கள்–053 பராமரித்தலும் செப்பனிடுதலும் – மாநிலச் செலவினங்கள் – DP கட்டடங்கள் – மாற்றுத் திறனாளிகள் நலப் பள்ளிகள் மற்றும் சேவை இல்லங்கள்–18 பராமரிப்பு – 01 குறித்த காலப் பராமரிப்பு"
[த.தொ.கு 2059–01–053–DP–1814]"

5. மேலே, பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பெற்று சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறை அலுவலருக்கு வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேற்கண்ட பணிகளை இந்நிதியாண்டிற்கான (2018–19) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளுமாறும், இப்பணிகள் முடிவடைந்த பின்னர் அதற்கான பணி முடிப்பு சான்றிதழினை (Work Completion Certificate) அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சாரா எண் 23869/நிதி(சந)/2018, நாள் 09.05.2018–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18.

**நகல்:**

அரசுச் செயலரின் முதன்மைத் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
நிதி (சந)த் துறை, சென்னை–9.
பொதுப் பணி (ஜி1)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்